செ.வெ.எண் : 339 18/4/10

செய்தி வெளியீடு–18.4.2010

தஞ்சைப் பெரிய கோயில் கட்டப்பட்டு 1000 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி சிறப்பு நாணயம் வெளியிட வேண்டும்! முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கோரிக்கையை ஏற்று மத்திய அரசு முடிவு!

மாமன்னன் இராஜராஜசோழனால் கட்டப்பட்டதும், தனித்தன்மை மிகுந்த திராவிடக் கட்டடக் கலை அம்சங்கள் நிறைந்ததும், "யுனெஸ்கோ" நிறுவனத்தால் "உலகப் பாரம்பரிய நினைவுச் சின்னம் (World Heritage Monument)" என அறிவிக்கப்பட்டுள்ளதுமான தஞ்சைப் பெரிய கோயில் கட்டப்பட்டு, 1000 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி; மத்திய அரசு சிறப்பு நாணயம் வெளியிட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கேட்டுக்கொண்டதையடுத்து; தஞ்சைப் பெரிய கோயிலின் உயர்தனிச் சிறப்பு – இணையற்ற கட்டடக் கலை மேன்மை ஆகியவற்றின் அடிப்படையில் மத்திய அரசு சிறப்பு நாணயம் வெளியிட முடிவு செய்திருப்பதாக மாண்புமிகு நிதியமைச்சர் திரு.பிரணாப் முகர்ஜி அவர்கள் முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

மேலும், தஞ்சைப் பெரிய கோயில் கட்டப்பட்டு, 1000 ஆண்டுகள் நிறைவடைவதன் நினைவாக தபால் தலை ஒன்றை வெளியிடவேண்டுமென்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மத்திய அரசின் தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு.ஆ.இராசா அவர்களுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

*****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
கலைமைச் செயலகம், சென்னை-9